10 ஜனவரி 2013

**முஸ்லிம் அல்லாதார் "*அல்லாஹ்*" எனும் வார்த்தையை பயன்படுத்துகிற அங்கத்துவ சபைகளுக்கு மலேசியா-தேசிய இவாஞ்சலிக்கல் கிறிஸ்தவ ஐக்கியத்தின் (என்.இ.சி.எஃப்) ஆலோசனை**

கூட்டரசு அரசியலமைப்பு சட்டம் வகை செய்கிற சமய சுதந்திரத்தைக் கடைபிடிக்க ஒவ்வொரு தனி நபருக்கான உரிமையை ***என்.இ.சி.எஃப்*** உறுதிப்படுத்துகிறது. 11வது விதியின்படி ஒவ்வொரு மலேசிய குடிமகனும் தங்களது சமயத்தைப் பறைசாற்றவும் அதின் விவகாரங்களை நிர்வகிக்கவும் இடமளிக்கிறது.

தங்களது சமயத்தை பறைசாற்றவும் அதின் விவகாரங்களையும் நிர்வகிக்க இடமளிக்கிறதென்பது ***அல்-கித்தாப்*** எனும் பரிசுத்த வேதாகமத்தை தேசிய மொழியாகிய மலாய் மொழியிலேயும் சபா சரவாக் பூர்வீக பேசும் நடை முறை மொழியில் பயன்படுத்துகிற ***அல்லாஹ்*** எனும் சொல்லை உச்சரிப்பதற்கும் கொடுக்கப்படுகிற உரிமையாகும். அதாவது சபைக்கூட்டங்களீலேயும், வெளியேயும் வீடுகளிலும் பயன்படுத்தலாம் என்பதாகும்.

ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் மாத்திரமே தேசிய மொழியில் குறிப்பிட்ட வார்த்தையை பயன்படுத்த முடியும் என்று வலியுறுத்துவது கூட்டரசு அரசியலமைப்பு சட்ட விதிகளுக்கு முரண்பாடானது. ஒரு சமய நம்பிக்கையை சார்ந்தவர்கள் மற்ற சமயத்தை சார்ந்தவர்களின் நிர்வாகத்தில் தலையிட்டு குறிப்பாக எந்தெந்த வார்த்தையை பயன்படுத்தமுடியும் அல்லது பயன்படுத்த முடியாது என அறிவுறுத்துவது பொருந்தாத ஒரு செயலாகும்.

***என்.இ.சி.எஃபின்*** நிலைப்பாடு

1. 18 பிப்ரவரி 2010ல் ***அல்லாஹ்*** எனும் வார்த்தையை முஸ்லிம் அல்லாதோர் பயன்படுத்த தடைசெய்த ஃபாட்வா சமய இயக்கத்தின் அறைகூவலை முஸ்லிம் அல்லாதோர் பின்பற்றத் தேவையில்லை ஏனெனில் சிலாங்கூர் மாநிலத்தில் இயற்றப்பட்ட 2003ஆம் சட்டம் அதின் இஸ்லாமிய நிர்வாக விவகாரங்களுக்கென உள்ளது போல வரையறுக்கப்பட்ட ஃபாட்வா சட்டமும் முஸ்லிமருக்கென மாத்திரம் பொருந்துகிறது.

2. இயற்றப்பட்ட ***முஸ்லிம் அல்லாதோர் சமய சட்டம் 1988***ன்படி (முஸ்லிம்களுக்கு மற்ற மதத்தை பரப்பத் தடை) இஸ்லாமியர்கள் மத்தியில் சமய பரப்புரைக்கு தடை விதிக்கப்பட்டதே தவிர தனி மனிதனின் மொழி பயன்பாடு, சபைக்கூட்டங்களீலேயும், வெளியேயும் வீடுகளிலும் ***அல்-கித்தாப்*** வாசிக்க, பயன்படுத்தக்கூடாது என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.


**Office Address:** 32 Jalan SS 2/103, 47300 Petaling Jaya, Selangor, Malaysia
**Tel:** 603 7727 8227 **Fax:** 603 7729 1139 **Email:** enquiries@necf.org.my **Website:** www.necf.org.my

3. சிலாங்கூர் இஸ்லாமிய சமய மன்றம் நிலையற்றதும் இக்கால மேம்பாடுகளுக்கு ஏற்ப செயல்படவில்லை என்றும் கீழ்க்காண்பவற்றில் இருந்து தெரிந்து கொள்கிறோம்.

- இறக்குமதிக்கு தடை செய்யப்பட்ட ***அல்-கித்தாப்*** புத்தகங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு அமைச்சரவையால் ஏப்ரல் 2011ல் வாக்களிக்கப்பட்ட 10 குறிப்புகள் அடங்கிய தீர்வில், முஸ்லிம் அல்லாதோர் ***அல்லாஹ்*** எனும் வார்த்தையை பயன்படுத்த முடியும் எனும் உரிமையை அங்கீகரித்துள்ளது.

- ***ஹெரால்ட்*** எனும் வாராந்திர கத்தோலிக்க பத்திரிகையில் ***அல்லாஹ்*** எனும் பதத்தை பயன்படுத்த 31.12.2009ல் அங்கீகாரம் வழங்கிய உயர்நீதிமன்றம், கூட்டரசு உரிமையை உறுதிப்படுத்தி இருப்பது இன்னும் செல்லுபடியாகிறது.

கடந்த மாதம் 25.12.2012ல் மலேசிய கூட்டரசு கிறிஸ்தவ ஸ்தாபனத்தின் ஏற்பாட்டிலான கிறிஸ்மஸ் தேநீர் ஐக்கியத்தில் கலந்துகொண்ட நமது நாட்டின் பிரதமர், தாம் மலேசியர் அனைவருக்கும் பிரதமர் என்றும் கிறிஸ்தவர்கள் மறக்கப்படவில்லை என்றும் உறுதி அளித்தார். இத்தகைய உறுதிப்பாடு இருந்தும், கிறிஸ்தவர்கள் விவகாரங்களில் தாங்களே முடிவு எடுக்கும் உரிமைகளில் மற்றவர்கள் மூக்கை நுழைப்பது மிகவும் ஏமாற்றத்துக்கு உரியதாய் இருக்கிறது.

பரிசுத்த பவுல் 1 தீமோத்தேயு 2:1-2ல் கூறிய வார்த்தைகளின்படி “எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பம் செய்யுங்கள். தேவன் அவர்கள் எல்லாரையும் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். அவர்களுக்காக நீங்கள் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறீகள் என்பதைத் தேவனிடம் தெரியப்படுத்துங்கள். கலகம் இல்லாமல் ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்கும் ஜெபம் செய்து தேவனை ஆராதிக்கவும் கனப்படுத்தவும் வேண்டும் என எல்லாக் கிறிஸ்தவர்களையும் உற்சாகப்படுத்துகிறேன்.

கையொப்பம்



மறைத்திரு முனைவர் இயூ ஹோங் செங்
தலைவர்
என்.இ.சி.எஃப். மலேசியா